[திரு. செ. முத்துசாமி] [28th January 1972

கொடுத்து இன்னும் அதிகமாகக் கொடுப்பதற்கு முயற்சி செய்கிறோம், இதைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். கொடுக்கப்பட்டிருப்பது என்ன? 4 ஆசிரியர்களுக்கு மேல் உள்ள பள்ளியில் ஐந்து ரூபாய், 300 பிள்ளைகளுக்கு மேல் உள்ள பள்ளியில் பத்து ரூபாய் கொடுப்பது என்று 1971 பிப்ரவரி மாதம் போடப்பட்ட உத்தரவு இன்னும் நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளுக்கு அனுப்பப்படவில்லை. அமுல்படுத்தப்படவில்லை. அரசாங்கத்திடம் பலமுறை கேட்டு மகாநாடுகள் நடத்தி அமைச்சரிடம் போராடி ஆர்டர் பெறுகிறோம். அதை அமுல் செய்வதற்கு அதிகாரிகள் தயங்குகிறார்கள். இதற்கு உடனடியாகக் கல்வி அமைச்சர் அவர்கள் உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல ஆண்டுகள் கஷ்டப்பட்டு வாங்குகிற நன்மைகளை இடையில் உள்ளவர்கள் ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். அதைத்தான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரே ஒரு பிரச்னையை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். தொழிலாசிரியர்கள் என்று சிலரை வைத்திருக்கிறார்கள். தொடக்கப் பள்ளிகளில் தொழில் கற்றுக் கொடுப்பதற்காக அவர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ரூ. 30 தருகிறார்கள். இந்தக் காலத்தில் முதியோர் பென்ஷன்கூட அதிகமாகிவிட்டது. ரிடையர் ஆனவர்கள் கொஞ்சம் தான் சாப்பாடு சாப்பிடுவார்கள், வயதாகிவிட்டதால். அவர்களுக்கு ரூ. 20 கொடுக்கிறோம். ஃபுல் டைம் ஆக இருந்தால் இரண்டு பள்ளிகளுக்குச் சேர்ந்து நியமித்து விடுகிறார்கள். காலையில் ஒரு பள்ளி, மாலையில் ஒரு பள்ளி. இரண்டு பள்ளிகளில் வேலை செய்தால் ரூ. 60 கொடுக்கிறார்கள். 1969 மகாநாட்டில் நாங்கள் கேட்டோம். இதற்கு 6 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. ஆசிரியப் பெருமக்கள் எவ்வளவோ நிதிகளைத் திரட்டித் தருகிறோம். எதற்கும் மறுப்புச் சொல்லாமல் திரட்டித் தருகிறார்கள். பாதுகாப்பு நிதிக்கு சில கோடி ரூபாய்களைத் தந்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது ரூ. 6 லட்சம் பெரிதல்ல அரசுக்கு. சம்பளக் குழுவிலே இதைக் கவனிக்காமல் விட்டு விட்டார்கள். ரீ-ஃபிக்சேஷன் செய்யவில்லை. 5½ லட்சம் எம்ப்ளாயீஸ்களில் இந்த பி.இ. க்களுக்கு ரீ-ஃபிக்சேஷன் இல்லை. மைனாரிடி, மதத்தின் பெயரால் மைனாரிடி, என்றெல்லாம் பேசி சலுகை பெறுகிறார்கள். தொழிலாசிரியர்களுக்கு நிச்சயமாக அவர்கள் சம்பளத்தை மாற்றி அதிகப்படுத்தி உத்தரவிட்டு அரசு அவர்களுக்கு உதவும் என்ற நம்பிக்கையோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி இருக்கையில் அமருகிறேன்.

MR. CHAIRMAN : The House will now adjourn and meet at 4 p.m. tomorrow.

6 45 p.m.

The House then adjourned.

IV. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders

22. Notification issued with G.O. Ms. No. 2380, Home, dated the 30th August 1971 in regard to an amendment to rule 209 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

28th January 1972]

23. Notification issued with G.O. Ms. No. 2205, Home, dated the 10th August 1971, in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

B. Reports, Notifications and other Papers

24. Erratum issued with Roc. No. 164237/69, dated the 25th February 1970 to the notification published in page 420 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette,* dated the 17th December, 1969, relating to bifurcation of Madampatti town panchayat.

25. Notification issued with G.O. Ms. No. 244, Labour, dated the 21st February 1970, in regard to an amendment to the Tamil Nadu Plantations Labour Rules, 1955.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS